முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# மகான் இடங்கழி நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

16.11.2018, வெள்ளிக்கிழமை

1. **வழிகாட்டும் ஞானியே அரங்கா**
**வலு கூட்டும் ஞான தேசிகா**
**அழியாமை அருளுகின்ற முருகா**
**அரங்கனே உன் பெருமை கூறி**

2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா விளம்பி துலை திங்கள்
தெரியவே முப்பான்திகதி புகர் வாரம்
(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 30ம் நாள் 16.11.2018 வெள்ளிக்கிழமை)
தேசிகனுக்கு இடங்கழி நாயனார் யானும்

3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான அரங்கன் தருமம்
ஞானமுடன் அழியாமை தரவிருக்க
நம்பி வாருங்கள் அரங்கன் சபைக்கு

4. அரங்கன் சபை ஆறுமுகன் சபை
அள்ளித் தாருங்கள் தருமம் பெருக
வரங்கள் தனை நீங்கள் கேட்காமலே
வழங்கும் ஞான சக்தியாகவுள்ள

5. உள்ளதொரு அரங்கன் திருவடி
உலகை உயர்த்தும் ஞானத்திருவடி
வல்லமைபட ஏற்றுப் பணியவே
வாழ்வாதாரம் வெற்றி பெறும் வளம் பெறும்

6. வளம் தரும் ஞான குருவரங்கன்
வலிமைமிக்க தவ சக்தியை
பலம்பெற தீட்சையாக பெற்றுவர
பணிந்து ஞான வழித் தொடர

7. தொடரவே கலியுகம் மாறும்
தொடரவே அழிவில்லா யுகம்
இடர்கள் என்பதே இல்லா யுகம்
இனிதே சடுதி அமையும் அரங்க ஞானியால்

8. ஞானமாக ஞான தேசிகனார்
ஞானிகள் பூசை செய்து அழைக்க
தானதருமம் செய்து கொண்டு
தக்க வழி தெரியா தவிப்பவர்கள்

9. தவிப்பவர்கள் அனைத்து பேர்களும்
தவராசன் அருளை நாடியே
புவிதனில் காப்பு தருவாய் என
புண்ணியம் செய்து கொண்டு அணுகி

10. அணுகி ஆசி தீட்சை பெற
அணுகி அன்னதானம் தொடர
அணுகி ஞான தீட்சை பெறுவதுடன்
அனுதினம் நாமசெபம் செய்து கொண்டு

11. செய்து கொண்டு வருதல் காண
சேவையென அரங்கன் சீடர்களாகி
அய்யமற ஞான வழித் தொடர
அனைவரும் ஞானிகள் ஆவர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் இடங்கழி நாயனார் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

உலகிற்கு தர்மத்தின் வழிதனை காட்டும் ஞானியே, உண்மை ஞானவழிதனை காட்டும் சற்குருவே அரங்கமகா தேசிகனே உலகின் தர்ம பலத்திற்கு வலுசேர்க்கும் ஞான தேசிகனே, அழிவிலாமை ஞானம்தனை அருளுகின்ற முருகப்பெருமானின் அவதாரமே அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 30ம் நாள் 16.11.2018 வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதினிலே ஒளி சூட்சும நூல் தனையே இடங்கழி நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் இடங்கழி நாயனார்.

உயர்வான சக்திமிக்க ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தர்மங்கள் மக்களுக்கு ஞானமுடன் அழிவிலாமை என்னும் பேரின்ப நிலையையும் தரும். ஆதலினால் உலக மக்களே ஆறுமுக அரங்கனை நம்பி வாருங்கள், உடன் விரைந்து வாருங்கள், ஆறுமுக அரங்கமகா தேசிகனார் யுகமாற்றம் கருதி அமைத்திட்ட ஏழாம் படைவீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு.

ஆறுமுக அரங்கனின் ஏழாம்படை வீடு ஞானசபை முருகப்பெருமானின் சபையாகும். அரங்கன் தர்மம் பெருகிட அள்ளித் தாருங்கள் பொருளுதவியை. அரங்கன் தர்மத்திற்கு பொருளுதவி செய்தவர்களுக்கு அவர்கள் கேட்காமலேயே வரங்களை தந்தருளும் அரங்கன் திருவடி.

கேட்காமலேயே வரங்களை தருகின்ற ஞான சக்தியாக உள்ள அரங்கன் திருவடியே உலகினை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் வல்லமைமிக்க ஞானத்திருவடியாகும். வல்லமை மிக்க அரங்கனின் திருவடியை வல்லமைகளை பெறும் பொருட்டு பணிந்து ஏற்றுக் கொள்ள, ஏற்பவரின் வாழ்வாதாரம் மேல்நிலையை அடைந்திடும், அவர்களது வாழ்வு வெற்றி பெறும், வளமான வாழ்வாக அமைந்திடும்.

எல்லா வளங்களையும் தந்தருளும் ஞானகுரு அரங்கமகா தேசிகனாரின் வலிமை மிக்க தவசக்தியை அவரவரும் பலம் பெறும் வகையில் தீட்சை உபதேசம் வடிவினில் பெற்று வந்து அரங்கன் உபதேசிக்கின்ற ஞான வழிதனில் தொடர்ந்து கடைப்பிடித்திட இந்த கலியுகத்தில் துன்பங்கள் எல்லாம் விலகி கலியுகம் மாற்றம் அடையும். மேலும் மேலும் அதிகமான மக்கள் தொடர்ந்திட இந்த உலகிற்கு வர இருக்கும் பேராபத்துகள், இயற்கை சீற்றங்கள் எல்லாம் விலகி அழிவிலாத யுகமாக மாறிடும். இடர்கள் என்பதே இல்லாத யுகமாக விரைந்து அமைந்திடும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருளினால்.

உலக மக்கள் ஞானம் பெறுவதற்காகவே ஞான தேசிகனார் அரங்கன் ஞானிகள் பூஜைகளை செய்து அதில் மக்களை பங்கு பெறச் செய்து கடைத்தேறிடவே உலகோர்க்கு அழைப்பு விடுக்கின்றார். ஆதலினால் உலகினில் தான தர்மங்களை செய்தும் தக்க வழி தெரியாமல் தக்க ஆசான் கிடைக்காமல் தவிப்பவர்கள், ஞானம் தேடி அலைபவர்கள், தவிப்பவர்கள் எல்லாம் அவர்களது அனைத்து துன்பங்களும் போக்கிட தவராசன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருளை நாடிச் சென்று ஆறுமுக அரங்கனின் வல்லமைமிக்க திருவடிகளிலே பயபக்தியுடன் பணிந்து வணங்கி இந்த புவியில் எம்மையும் ஒரு பொருட்டாக மதித்து ஏற்றுக் கொண்டு, எமக்கு பாதுகாப்பு தருவாய் அரங்கமகா ஞானகுருவே என மனம் உருகி வணங்கி அரங்கனின் தான தர்மங்களில் பங்கு கொண்டு பொருளுதவிகள் செய்தும் தர்மங்கள் செய்தும் வருவதுடன் அரங்கனிடத்து ஆசிகளையும் தீட்சை உபதேசங்களையும் அடைந்து அன்னதான பணிகளை தொடர்ந்து செய்து வருவதுடன் தினம் தினம் மறவாமல் ஞானிகளின் நாம ஜெபங்களை செய்தும் வரவேண்டும்.

இவ்விதமே அரங்கன் திருவடி பணிந்து தர்மங்களையும் அன்னதானமும் செய்து வருவதுடன் பூஜைகளையும் தொடர்ந்து செய்து அரங்கன் மேற்கொள்ளும் அறப்பணிகளுக்கு தொண்டுகள் செய்தும் வந்து அரங்கனின் சீடர்களாக ஆகி சந்தேகம் ஏதும் இன்றி அரங்கன் கூறும் மெய்ஞான வழியில் தொடர்ந்து வரவர அரங்கன் ஆசியால் ஆறுமுகனார் தயவால் அவர்கள் எல்லாம் ஞானிகளாக ஆகிடுவர் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் இடங்கழி நாயனார்.

–சுபம்–